அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2022/2023

# தமிழ்

## ஆண்டு 11

| | |
|---|---|
| **நேரம்: 180 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்: 15** |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. ஔ என்ற எழுத்தின் இனவெழுத்து
   1. இ
   2. உ
   3. ஆ
   4. ஐ

2. செம்மொழிகளுள் அடங்குபவை
   1. யேர்மன், பிரஞ்சு
   2. டெனிசு, யப்பான்
   3. ஆங்கிலம், தெலுங்கு
   4. தமிழ், சீனம்

3. குற்றியலுகரச் சொல் அல்லாதது
   1. வாழ்வு
   2. தோப்பு
   3. தோடு
   4. அழகு

4. அகச்சுட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டு
   1. அப்பெட்டி
   2. உவ்வீடு
   3. அவள்
   4. இம்மாந்தன்

5. விசயநகரப் பேரரசைச் சேர்ந்தவர்கள்
   1. சோழர்
   2. நாயக்கர்
   3. களப்பிரர்
   4. முகமதியர்

6. தம்பட்டமடித்தல் என்பதன் பொருள்
   1. பெருமை பேசுதல்
   2. உறுதி கொள்ளுதல்
   3. அமைதியாக இருத்தல்
   4. உழைப்பைப் பறித்தல்

7. உயிர்மெய்க் குறிலெழுத்துக்குரிய மாத்திரை
   1. இரண்டு
   2. அரை
   3. ஒன்றரை
   4. ஒன்று

1 2 3 4

8. நானும் வளவனும் கல்விச் சுற்றுலாவுக்குச் சென்றோம். இச்சொல்லியத்தில் செயப்படுபொருள்
   1. சுற்றுலா
   2. இல்லை
   3. கல்வி
   4. வளவன்

9. ஐந்து + திணை என்பதைப் புணர்த்தினால்
   1. ஐந்திணை
   2. ஐம்திணை
   3. ஐந்துதிணை
   4. ஐன்திணை

10. தளிர் அன்ன கை என்ற உவமையணியின் பொதுத்தன்மை
   1. வன்மை
   2. குளிர்மை
   3. மென்மை
   4. செம்மை

11. "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!" எனப் பாடியவர்
   1. மகாகவி பாரதியார்
   2. பாவலரேறு பெருஞ்சித்திரனார்
   3. பாவேந்தர் பாரதிதாசன்
   4. திருமூலர்

12. மொழிக்கு முதலில் மட்டும் வரும் வினாவெழுத்துகள்
   1. ஆ, ஓ
   2. அ, இ
   3. எ, யா
   4. இ, உ

13. ஆடுகிறவள் என்பது
   1. வினையாலணையும் பெயர்
   2. தொழிற்பெயர்
   3. பண்புப்பெயர்
   4. பொருட்பெயர்

14. நாயக்கர்காலச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று
   1. கலிங்கத்துப்பரணி
   2. நந்திக்கலம்பகம்
   3. நளவெண்பா
   4. மீனாட்சி பிள்ளைத்தமிழ்

1 2 3 4

15. ய், ர், ல், வ், ழ், ள் என்பன
    1. வல்லினம்
    2. உயிரினம்
    3. இடையினம்
    4. மெல்லினம்

16. வன்னியில் வயல் நிலங்கள் பச்சைப்பசேலெனக் காட்சியளிக்கும். பச்சைப்பசேல் என்பது
    1. அடுக்கிடுக்குத்தொடர்
    2. இரட்டைக்கிளவி
    3. அடுக்குத்தொடர்
    4. இணைமொழி

17. கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கருத்துப்படி உலகை மாற்றுவோர்
    1. முதலாளிகள்
    2. உழைப்பாளிகள்
    3. செல்வந்தர்
    4. சுரண்டுவோர்

18. தமிழுக்குச் செம்மொழிக்கான தகுதி வழங்கப்பட்ட ஆண்டு
    1. 2014
    2. 2000
    3. 1998
    4. 2004

19. மென்றொடர்க் குற்றியலுகரத்துக்கு எடுத்துக்காட்டு
    1. மார்பு
    2. அழகு
    3. வீடு
    4. குஞ்சு

20. ஆசுகவி, வசைக்கவி எனச் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டவர்
    1. பட்டினத்தடிகள்
    2. காளமேகப் புலவர்
    3. இரட்டையர்
    4. பரஞ்சோதி முனிவர்

21. செய்யுளின் அடிகளிலோ, சீர்களிலோ இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது
    1. மோனை
    2. சிலேடை
    3. எதுகை
    4. உருவகம்

1 2 3 4

22. இனியவை நாற்பது என்பது
    1. பதினெண்கீழ்க் கணக்கு நூல்
    2. பத்துப்பாட்டு நூல்
    3. எட்டுத்தொகை நூல்
    4. காப்பியம்

23. வெந்நீர் என்பதன் சொற்பிரிப்பு வடிவம் என்பது
    1. வெம்மை + நீர்
    2. வென்மை + நீர்
    3. வெம் + நீர்
    4. வெந் + நீர்

24. கையளிப்பேன் என்பது
    1. தன்மைப் பன்மை வினைமுற்று
    2. தன்மை ஒருமை வினைமுற்று
    3. படர்க்கைப் பன்மை வினைமுற்று
    4. முன்னிலை ஒருமை வினைமுற்று

25. சோலை எங்கும் பறவைகளின் இனியபாடல் கேட்கிறது. இச்சொல்லியத்தில் அடைமொழி ஏற்ற சொல்
    1. சோலை
    2. பறவைகள்
    3. எங்கும்
    4. பாடல்

(25 x 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மொழியியலாளர்கள் வரையறை செய்துள்ள செம்மொழிக்குரிய தகுதிகளுள் நான்கினை எழுதுக.

_______________________________________________

_______________________________________________

2. நாயக்கர் காலத்தில் எழுதப்பட்ட இசுலாமிய இலக்கியம் எது? அதை எழுதியவர் யார்?

_______________________________________________

_______________________________________________

3. புதுவை இரத்தினதுரை தமது கவிதைகளினூடாக எதைப் பரப்புரை செய்தார்?

_______________________________________________

_______________________________________________

4. திறனாய்வுக் கலையால் கிடைக்கும் பயன்கள் இரண்டு எழுதுக.

______________________________________________

______________________________________________

5. எழுவாய், செயப்படுபொருள், பயனிலை, அடைமொழிகள் இடம்பெறுமாறு சொல்லியம் எழுதுக.

______________________________________________

______________________________________________

6. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.
தொடர்ச்சொல்லியம்: ______________________________________________

______________________________________________

வியப்புச்சொல்லியம்: ______________________________________________

______________________________________________

7. தரப்பட்டுள்ள அடுக்கிடுக்குத்தொடர்களை அடுக்குத்தொடர்களாக மாற்றுக.

வெட்டவெளி: ____________________ செக்கச்சிவந்த: ____________________

தன்னந்தனி: ____________________ பென்னம்பெரிய: ____________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. அறிவூட்டிய ஆசான்கள்

2. 

(5 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**4. தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

பருவநிலை மாற்றங்களால் உலகநாடுகள் பல்வேறு இடர்களை எதிர்நோக்கியுள்ளன. உணவுப் பொருள்களின் விலையேற்றம், எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவையே இன்று முன்வைக்கப்படும் இடர்களாகும். கடந்த 50 ஆண்டுகளில் கடும் வறட்சியால் உலகநிலப்பரப்பில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கு பாழாகிவிட்டது. இதன் காரணமாக வேளாண்மையுடன் அடிப்படை வாழ்வியலும் பாதிப்படைந்துள்ளது. இதனால், நூறு மில்லியனுக்கு அதிகமானோர் உணவுத்தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர். காடுகள் தீப்பற்றி எரிதல், தொற்றுநோய்களின் பரவல் ஆகியன அதிகரித்துள்ளன. வெப்ப உயர்வால் ஏற்படும் சாவுகளின் எண்ணிக்கையும் கூடியுள்ளன. ஐரோப்பாவில் அதிகளவு வெய்யிலால் கடந்த ஆண்டு 15,000 பேர் பலியாகியுள்ளனர். பருவநிலை மாற்றம் தொடர்பான 27ஆவது ஒன்றிய நாடுகளின் உச்சிமாநாடு எகிப்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றிய ஒன்றிய நாடுகள் அவையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேசு புவி வெப்பமடைவதால் எதிர்நோக்கும் பாதிப்புகளை வளர்ந்து வரும் நாடுகள் அதிகம் சந்தித்து வருவதாகக் கூறியுள்ளார். அத்துடன் உலகநாடுகள் ஒத்துழைக்காவிட்டால் மாந்தகுலம் அழிந்து போகும் நிலையேற்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்நிலையைத் தடுக்க அனைத்து நாடுகளும் சேர்ந்து செயற்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், லான்செட் என்னும் இதழில், உலகளவில் அதிகரித்து வரும் வெப்பநிலையைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுப்பதன் இன்றியமையாமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் நலமாக வாழ்வதற்காக மட்டுமல்ல மாந்த உயிர்கள் பிழைத்திருப்பதற்காகவும் இந்நடவடிக்கை அகத்தியமானது என்பதைப் பற்றியும் இதில் எழுதப்பட்டுள்ளது.

(5 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

பெருமழை பெய்துகொண்டிருந்தது. அதனால், வெள்ளம் பாய்ந்து ஓடியது. அதைக் கண்ட மக்கள் அச்சப்பட்டு வீடுகளுக்குள் முடங்கினர். பெருங்காற்று வீசியதால், மரங்கள் பேரொலியுடன் முறிந்து வீழ்ந்தன. இயற்கையின் சீற்றத்தால் அவ்வூரே கலங்கிப் போனது. இரண்டு, மூன்று நாள்களின் பின் மழை நின்றது. வானம் எங்கும் இருள் நீங்கி வெளிச்சமாக இருந்தது. மக்கள் வழக்கம் போல் நடமாடத் தொடங்கினர். தெருவெங்கும் மழைநீர் ஓடியது. சிறுவர்கள் தாளில் கப்பல்கள் செய்து அவற்றை மழைநீரில் விட்டு மகிழ்ச்சியுடன் விளையாடினார்கள்.

(5 புள்ளிகள்)

**வாழிடமொழி:**

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. இலக்கியத்திறனாய்வு
2. தமிழ் ஒரு செம்மொழி
3. உலகநாடுகளின் இன்றைய பொருண்மியமும் மக்கள் எதிர்கொள்ளும் இடர்களும்

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- இன்றைய பொருண்மிய நிலைக்கான காரணங்கள்
- மக்கள் எதிர்கொள்ளும் இடர்கள்
- தடுப்பதற்கான வழிவகைகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையானவிடை எழுதுக.**

மலையகச் சிறுகதைகள் என்றால், நினைவுக்கு வரும் எழுத்தாளர் தெளிவத்தை யோசப் ஆவார். இவர் ஈழத்திலுள்ள மலையகம் என்ற அடையாளத்துக்கு உயிரூட்டியவர். தெளிவத்தை யோசப் அவர்கள் படைப்பு இலக்கியத்துறையில் சிறுகதை, புதினம், ஆய்வுக்கட்டுரைகள், திரைக்கதை, இலக்கியம் போன்றவற்றில் பன்முக ஆளுமைகள் கொண்டவராகத் திகழ்ந்தார். இவர் பிறந்த மலையகத் தோட்டத்தின் பெயரான தெளிவத்தை என்பதை முன்னொட்டாக வைத்து தெளிவத்தை யோசப் என அழைக்கப்பட்டார். 'மலையகச் சிறுகதை வரலாறு' என்ற ஆய்வுக்கட்டுரை தெளிவத்தை யோசப் அவர்களது ஆய்வுத் திறனை வெளிப்படுத்துகிறது. மலையகச் சிறுகதைகள், உழைக்கப் பிறந்தவர்கள் போன்ற பல சிறுகதைத் தொகுதிகளையும் இவர் எழுதியுள்ளார். படைப்புத் திறனுக்கான பல பாராட்டுகளும் பட்டங்களும் தெளிவத்தை யோசப் அவர்களுக்குக் கிடைத்துள்ளன. மலையகத்திலிருந்து வெளிவந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட பல்துறை சார்ந்த நூல்களுக்குத் தெளிவத்தை யோசப் எழுதியுள்ள முன்னுரைகள், இவர் ஒரு சிறந்த ஆய்வாளர் என்பதற்குச் சான்றாகின்றன. 2022ஆம் ஆண்டு வெளிவந்த 'குளிரும் தேசத்துக் கம்பளிகள்' என்ற நூலுக்கு இவர் எழுதிய முன்னுரையே இறுதி முன்னுரையாகும். செய்திச் சேமிப்புக் களஞ்சியம் என்று சொல்லும் அளவுக்குத் தெளிவத்தை யோசப் தனது வீட்டில் பல நூல்களைச் சேமித்து வைத்திருந்தார். ஏதாவது நூல் தேவையெனில், இவரிடம் சென்றால் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் இருந்தது. நூற்றுக்கணக்கான நூல் தொகுதிகளை கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்திற்கு இவர் அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார். எனவே, மலையகப் படைப்பிலக்கிய வரலாற்றில் தெளிவத்தை யோசப் அவர்களின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும்.

1. எழுத்தாளர் யோசப் அவர்களுக்குத் தெளிவத்தை என்ற முன்னொட்டு வரக்காரணம் என்ன? (2 புள்ளிகள்)

____________________________________________

____________________________________________

2. இவரது ஆய்வுத்திறனை வெளிப்படுத்தும் கட்டுரை எது? (1 புள்ளி)

____________________________________________

____________________________________________

3. தெளிவத்தை யோசப் அவர்கள் தனது நூல்களை அன்பளிப்புச் செய்த நூலகம் எங்குள்ளது? (1 புள்ளி)

____________________________________________

____________________________________________

4. இவர் இறுதியாக முன்னுரை எழுதிய நூலின் பெயர் என்ன? (1 புள்ளி)

____________________________________________

____________________________________________

5. தெளிவத்தை யோசப் அவர்கள் எவற்றில் பன்முக ஆளுமைகள் கொண்டவராகத் திகழ்ந்தார்? (2 புள்ளிகள்)

______________________________________

______________________________________

6. இவரது சிறுகதைத் தொகுதிகள் இரண்டின் பெயர்களை எழுதுக. (2 புள்ளிகள்)

______________________________________

______________________________________

(9 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.**

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- தைமகளே வருக!
- ஆண்டுவிழா காண வருக!
- பெற்றோர் கடமை
- ஆக்கத்திறனை ஊக்குவிப்போம்

1. ______________________________

தமிழ்மொழி கற்பித்தலின் அகத்தியத்தைத் தமது பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள் பெற்றோர்களே! உங்கள் முயற்சி இல்லையெனில், உங்கள் பிள்ளைகள் தாய்மொழி கற்பதில் ஆர்வம் காட்டமாட்டார்கள். எமது அடையாளம் எமது தாய்மொழியே! தாய்மொழி அறிவுள்ள பிள்ளைகளே, மற்றைய மொழிகளிலும் மேம்படுவர் என்ற உண்மையை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து, தமது பிள்ளைகளுக்கு எடுத்துரைத்து, அவர்களை ஊக்கவிக்க வேண்டும்.

2. ______________________________

எமது தமிழ்ப்பள்ளியில் ஆண்டு 12இல் கற்கும் மாணவன் பாண்டியன் எழுதிய எமது இளையோரின் எதிர்காலம் என்ற சிற்றிதழ் வெளியீடு எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வைச் சிறப்பிக்க அனைவரும் திரண்டு வாருங்கள். பாண்டியனின் முதன்முயற்சி மேம்பட என்றும் உங்கள் அன்பையும் வாழ்த்துகளையும் வழங்குங்கள்.

3. ______________________________

உழவர் திருநாளாம் பொங்கல் தைமாதம் முழுவதும் ஒவ்வொரு ஞாயிறு தோறும் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. இவ்விழாவை மேன்மைப்படுத்தும் வகையில் சொற்பொழிவுகளும் இசையரங்குகளும் எமது சிறார்களின் ஆடல், பாடல் நிகழ்ச்சிகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அனைவரும் திரண்டு வாருங்கள். விழாவைச் சிறப்பியுங்கள்.

(3 x 2 = 6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |